1992 ஏப்ரல் 10]

495—

வீடுகளுக்குப் பட்டா வழங்கல்.

*1350—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், உமாரெட்டியூரில் மேட்டுப்பாங்கான இடத்தில் கட்டியுள்ள வீடுகளுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், பவானி வட்டம், அம்மாப்பேட்டை கிராமம் (உமாரெட்டியூர் மஜரா) புல எண். 414/2. நத்தம் புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்காக நத்தம் நில அளவை பணி நடைபெற்று வருகிறது. அப்பணி முடிந்ததும் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் விரைவில் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு,—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. சிறப்புக் குறிப்புகள்.

(அ) வேலூர் சிறையிலிருந்து ஒரு கைதி தப்பியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேலூர் சிறையிலிருந்து கைதி ஒருவர் தப்பித்துவிட்டது பற்றிய பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று திரு. ஆர். தங்கராஜ், திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் என்னுடைய கவனத்திற்கு கொண்டுவந்திருக்கிறார்கள். அப்பிரச்சினையை எழுப்ப அனுமதிக்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

---

*8—4—1992 ஆம் தேதிய பட்டியலில் இருந்தது. உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க. பேரவைத் தலைவர் அனுமதியுடன் மீண்டும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.